Pathukitte Irukka Thonudhu

Guru · Tamil

"பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது
பெரியவாளை பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது"

தென்னாடுடைய பெரியவா போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
சர்வக்ஞா சர்வ வ்யாபி பெரியவா சரணம்
மாயப்பிறப்பறுக்கும் மஹாபெரியவா அடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மஹாபெரியவா அடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மஹாபெரியவா அடி போற்றி

பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது
பெரியவாளை பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது
பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது

பெரியவாளை பிரிந்து வர மனமும் மறுக்குது
பெரியவாளை பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

விஸ்வரூப தரிசனம் காண பக்தர் விடியகாலை
காத்திடும் போது வாழ்த்தொலிகள் ஒலித்திடும் போது
மேனா விளக்கினிலே துயில் எழும் போது
பெரியவாளை பார்த்துக்கிட்டடே இருக்கத்தோணுது

ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

பஞ்சாங்கம் படித்திடும் போது செவியில் பாங்காக கேட்டிடும் போது
பணிவோர்கள் யார் எனும் போதுயாதும் புரியார் போல் நடித்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத்தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

மங்கள நீராடிடும் போது மெதுவாய் மூழ்கியே எழுந்திடும் போது
மேலாடை போர்த்திடும் போது திருநீறு மேனியெல்லாம் பூசிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

அனுஷ்டானம் துவக்கிடும் போது அழகாய் ஆசமனம் புரிந்திடும் போது
அதிகாலை ஒரு மணி நேர ஜபத்தில் ஆழ்ந்தழகாய் அமர்ந்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

ஓர் மணி தான் நிறைவுறும் போது மணியும் ஓசையுடன் ஒலித்திடும் போது
ஓர் இரு கண் திறந்திடும் போது விந்தை யீதனையாம் வியந்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

ஜபம் முடிந்து நோக்கிடும் போது கண்ணால் ஐயம் உனக்கு என்றிடும் போது
ஜகம் எல்லாம் மறந்திடும் போது அந்த க்ஷண நேர பூரிப்பின் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

கை தட்டி அழைத்திடும் போது பாலு ஸ்ரீகண்டன் உடன் வரும் போது
வேதபுரி விரைந்திடும் போது மௌலி குமரேசன் குழைந்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

தண்டமதை ஏந்திடும் போது அழகாய் தளிர்நடை தான் போட்டிடும் போது

தொண்டர் படை உடன் வரும் போது நாமும் திருவீதி வலம் வரும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

தரிசனம் தான் தர வரும் போது ஒவ்வோர் இடமாக நகர்ந்திடும் போது
தனியாக நடந்திடும் போது முன்னால் படி என்று ஒளி வரும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

மேனாவில் அமர்ந்திடும் போது பின்னர் மரத்தடியில் இருந்திடும் போது மேடை மேல் ஏறிடும் போது வந்தோர் மனம் எல்லாம் களித்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

மலராகக் குவிந்திடும் போது பக்தர் கரம் சேர குவித்திடும் போது
மனமார ஏற்றிடும் போது மலரை சிரம் சேர போட்டிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது

ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

பூவினந்தான் சேர்ந்திடும் போது கொன்றை சரமாகத் தான் வரும் போது
தாமரையும் உடன் வரும் போது சிரம் மேல் சூட்டியுடன் சிரித்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

மல்லிகைப் பூ மலர் வரும் போது அல்லி மூவகையும் மலர்ந்திடும் போது
மெய்யன்பர் கொணர்ந்திடும் போது ஏற்று மணம் எங்கும் பரப்பிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

பழமாக குவித்திடும் போது அன்பர் தொழுதேற்ற தினம் வரும்போது
பழுதில்லா மனம் எனும்போது பார்த்து அழகாக கரம் தொழும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கரா

வந்தோரை விளக்கிடும்போது அவரின் தந்தை யார்
என்றிடும் போது சொந்தம் கூற் எனும் போது அன்னார்
முந்தை எல்லாம் தான் சொல்லும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
மானசீக பூஜையின் போது கரத்தால் வந்தனைகள்
புரிந்திடும் போது உபசாரம் பல செய்யும் போது மலர்கள்
திருக்கரத்தால் கொட்டிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
சங்கரா

பத்திரிக்கை படித்திடும் போது
மூக்குக் கண்ணாடி அணிந்திடும் போது
நான்கைந்து மாற்றிடும் போது
கூடைக்குள் எடுத்து வைத்திடும்போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
லென்ஸ் எடுத்து படித்திடும் போது
கையால் டார்ச் அடித்து படித்திடும் போது
புத்தகங்கள் படித்திடும் போது
கீழேவைக்காமல் முடித்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
பிரசாதம் பல வரும் போது

திருநீற் குங்குமங்கள் இட்டிடும் போது
தேங்காயை தொட்டிடும் போது
கொண்டு வந்தோர்க்கே திருப்பிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
தீர்த்தங்கள் வந்திடும் போது
ஹோமம் செய்வோர்கள் கொணர்ந்திடும் போது
ரட்சைகள் உடன் வரும் போது

நெற்றித்திலகம் என தரித்திடும் போது பெரியவாளை
பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர ஹர ஹர
சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
தஞ்சமென வந்திடும் போது
ஏழை திருமணங்கள் என வரும் போது அஞ்சேல் என
அருளிடும் போது
வாரி தங்கம் என வழங்கிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
அருள் எனக்கு என்றிடும் போது
கோவில் குடமுழுக்கு என வரும்போது அருள் மழையாய்
பொழிந்திடும்போது பூர்ணபலம் கொடுத்து
மகிழ்ந்திடும்போது பெரியவாளை பார்த்துகிட்டே
இருக்கத் தோணுது ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய
சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
புறங்கையை தட்டிடும் போது
அழகாய் ஒய்யார நடையிடும் போது

வேகமுடன் நடந்திடும் போது
சீடர் ஓடியுடன் வழி செய்யும்போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
பாலகுரு படித்திடும் போது
அங்கே பாஷ்ய பாடம் நடந்திடும் போது
பெருங்குருவாய் அமர்ந்திடும் போது பரிவாய்
தீஷண்யம் வீற்றிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
சர்ச்சைகள் நடந்திடும்போது
தானும் சந்தேகம் கேட்டிடும் போது
விற்பன்னர் விளக்கிடும் போது
தெளிவாய் விளக்கங்கள் தான் தரும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது

ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
வலக்கரத்தால் அருளிடும் போது
இதமாய் இடக்கரத்தால் அருளிடும் போது இரு கரத்தால்
அருளிடும் போது
மேலே உயர்க்கரத்தால் அருளிடும்போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
விழியிரண்டால் நோக்கிடும் போது
கனிவாய் மொழி சொல்லும் போல் நோக்கிடும் போது
கருவிழியால் நோக்கிடும் போது

கருணை மொழித் தாய்போல் நோக்கிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
அருள்நோக்காய் நோக்கிடும் போது மனதில் இருள்நீக்க
நோக்கிடும் போது களி நோக்காய் நோக்கிடும் போது
ஞான ஒளிநோக்காய் நோகிடும் போது பெரியவாளை
பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர ஹர ஹர
சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
மெதுவாக நடந்திடும் போது
கமல பதமலரை கண்டிடும் போது
பதமாக நடையிடும் போது
மனதும் இதமாக சுகம் பெரும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
அபிஷேகம் நிறைவுறும் போது
பூஜை ஹாரத்தி நடந்திடும் போது அவசரமாய்
விரைந்திடும் போது
சந்திர மௌலீஸ்வர் வலம் வரும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர

ஹர சங்கரா
குருவணக்கம் செய்ய சொல்லும் போது ஆதி குருபீடம்
பணி செய்யும் போது என் முறை தான் வணங்கிடும்
போது தோடகாஷ்டகம் தான் முடித்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர

ஹர சங்கரா
காய்கறிகள் குவித்திடும் போது
பிக்ஷாவந்தனத்தார் கொணர்ந்திடும் போது
ஒவ்வொன்றாய் ஆய்ந்திடும் போது
அவற்றை தனித்தனியாய் வை எனும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
அரிசி எங்கே என்றிடும் போது
பருப்பு வகைகள் என்றிடும் போது வெல்லம் எங்கே
என்றிடும் போது
தரமாய் வகைபிரித்து நகைத்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
வாழைக்காய் வைத்திடும் போது
அவரை வெண்டைக்காய் உடன் வரும் போது
மென்விரலால் அள்ளிடும் போது
வந்தோர் எண்ணமெல்லாம் குளிர்ந்த்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
பழவகைகள் பார்த்திடும் போது
கீரை பசுக்களுக்கு என வரும் போது வேறு வகை
கொண்டிடும் போது
தானே பசுக்களுக்கு ஊட்டிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா

வேழம் தான் முன்வரும் போது கையால் வாழைக்கனி
கொடுத்திடும் போது உண்டாயா என்றிடும் போது
யானை கொண்டாட்டம் கொண்டிடும் போது
பெரியவாளை பார்த்துக்கிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
மனை போட்டு அமர்ந்திடும் போது
முறையாய் மாத்யானியம் புரிந்திடும் போது
மென்கரத்தால் ஜபித்திடும் போது
இமைகள் மூடித் தவம் தான் செய்யும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
காட்சிக்கள் பல தரும் போது
வந்தோர் யாவர்க்கும் விடை தரும்போது
பிஷைக்கு இலை கொளும்போது
தானும் பிஷைக்கு திரும்பிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
பசி சேர்த்து வந்திடும் போது
கயிற்றுக் கட்டில் மேல் அமர்ந்திடும்போது கற்கண்டை
மென்றிடும் போது
ஏலம் லவங்கம் தான் சுவைத்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
காத்திருப்போர் நிறைந்திடும்போது
தானும் காத்திருந்தே அகன்றிடும் போது குறை
சொல்வோர் கேட்டிடும் போது

மேலும் கருணை கொண்டு அருளிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
மதியத்தில் காத்திடும் போது
அயலும் நேரத்தும் அருளிடும் போது மனமார
சிரித்திடும் போது

வந்தோர் மகிழ்வோடு விடை பெறும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
மாலைத்தான் வந்திடும் போது
மீண்டும் மெய்யன்பர் சேர்ந்திடும் போது மெதுவாக
வெளிவரும் போது
மாலை மதியம் போல் களி தரும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
திருநீறு அணிந்திடும் போது
மாலை அனுஷ்டானம் புரிந்திடும் போது முக்காலம்
முடிந்திடும் போது
இதையே எக்காலம் புரிந்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
பிரதோஷ பூஜையின் போது
சிரஸில் ருத்ராட்சம் தரித்திடும் போது
மார்பெங்கும் அணிந்திடும் போது
மாலை மலை போல மிளிர்ந்திடும் போது

பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
இரவென்னும் வேளையின் போது
பக்தர் நிறைகின்ற நேரத்தின் போது இரக்கம் தான்
மேலிடும் போது
இதையாய் எழுந்திட்டே அருள் செய்யும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
ஓய்வுக்கு அமர்ந்திடும் போது
கயிற்றுக் கட்டில் மேல் ஓய்ந்திடும் போது ஓரிருபேர்
வந்திடும் போது
அவரின் குசலம் தான் கேட்டிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர

ஹர சங்கரா
விஸ்ராந்தி பொழுதெனும் போது தொண்டர்
விநயத்தோடு இயம்பிடும் போது குழந்தை போல்
கேட்டிடும் போது
அவரின் வேண்டலுக்கு இணங்கிடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர சங்கர ஜய ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கரா
மேனாவுள் அமர்ந்திடும்போது
மீண்டும் ஓர் முறை தான் நோக்கிடும் போது ஓர்
கதவைமூடிடும் போது
திறந்த ஓர் கதவால் பார்த்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது ஹர
ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர

ஹர சங்கரா
யாரும் தான் இல்லை எனும் போது மேனா
கதவைத்தான் முடிடும் போது துயில் கொண்டார் இவர்
எனும் போது நாமும் தாலாட்டு இசைத்திடும் போது
பெரியவாளை பார்த்துகிட்டே இருக்கத் தோணுது
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா
ஹர ஹர ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர
ஹர சங்கரா ஜய ஜய ஜய சங்கரா ஹர ஹர ஹர சங்கர
ஜய ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர
சம்போ சங்கர சாம்பசதாசிவ பிரதோஷ சங்கர
பிரத்யச்ய சங்கர ஓரிக்கை சங்கர ஓங்கார சங்கர ஹர
ஹர சங்கர ஜெய ஜெய சங்கர